



நீட் தேர்வினால் தன்னுயிரை மாய்த்து கொண்ட தங்கை அனிதா அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் வானவில் விஜய் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் கூட்டத்தில் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் அரசுப் பள்ளி மாணவியருக்கு அமைச்சர் கல்வி உதவித்தொகை வழங்கினார். இந்நிகழ்வில் கூ.பீ.ஜெயின், வே.வாசு, சாவித்திரி விரராகவன், டி வி.செம்மொழி, சிட்கோ சேகர், தீனதயாளன், தங்கராஜ், சொ.முருகேசன், லோகுபாபு, எம்.சுரேஷ், அ.சுரேஷ்குமார், மைனர் பாபு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இறுதியாக பகுதி மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.மணிகண்டன் நன்றி கூறினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எழும்பூர் 77 ‘அ’ வட்டச் செயலாளர்

# வி.அபாய் இல்ல மண விழா வரவேற்பு! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை!

## தயாநிதிமாறன் எம்.பி. - கலாநிதி வீராசாமி எம்.பி. - மேயர் பிரியா ராஜன் - தா.இளைய அருணா பங்கேற்பு!

சென்னை, செப்.2

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்குப் பகுதி, 77 ‘அ’ வட்டக் கழகச் செயலாளர் வி. அபாய் - ஏ.தேன்மொழி ஆகியோரின் புதல்வர் ஏ. சசிக்குமாருக்கும், சென்னை, எம்.பி.கே.நகர் ஜெ.ஜெயக்குமார் - ஜெ.கீதா ஆகியோரின் புதல்வி ஜெ.இலக்கியா விற்கும் மணவிழா 3.9.2023- ஞாயிறு காலை 7.30 மணியளவில் சென்னை-வியாசர்பாடி இ.எச்.சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா மஹால் திருமண மண்டபத்தில் (வியாசர்பாடி மார்க்கெட் அருகில்) கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடன் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு இன்று (2.9.2023- சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் ரமேஷ் வழங்கும் சாய் ஸ்ருதி இன்னிசை நிகழ்ச்சியுடன் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.



சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. வரவேற்கிறார்.

இம்மணவிழா வரவேற்பில் கலாநிதி வீராசாமி எம்.பி., மேயர் பிரியா ராஜன், சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., பா.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் சொ. வேலு, வி.சுதாகர், க.ஜெயராமன், அ.முருகன், வட்டச் செயலாளர் வி.முருகன், மாமன்ற உறுப்பினர் இ. ஆனந்தி உள்ளிட்டோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் இதில், இந்நாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டத் துறை நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

வட்டச் செயலாளர் வி.அபாய், ஏ.தேன்மொழி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

புழல் எம்.நாராயணன் தலைமையில்

# மாதவரம் வடக்கு பகுதியில் மாணவி அனிதா நினைவேந்தல் நிகழ்ச்சி!

## கா.தாமரைச்செல்வன், இ.கண்ணப்பன், கே.கருணாகரன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன், த.விக்னேஸ்வரன், என்.பிரபு முன்னிலை!

சென்னை, செப்.2

ஒன்றிய அரசின் தவறான நீட் தேர்வு கொள்கை முடிவால் தமிழ்நாட்டில் பல இடங்களில் மாணவர்கள் நீட் தேர்வை எழுத முடியாமல் தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்டு வருகிறார்.

அந்த வகையில் தன்னுடைய இன்னுயிரை ஈந்த சகோதரி அரியலூர் அனிதாவின் நினைவு தினமான செப்டம்பர் 1 அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள மாணவரணி சார்பில் அனிதாவின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்த வேண்டும் என்று கழக மாணவர் அணி எடுத்த வேண்டுகோளை ஏற்று, மாதவரம் வடக்கு பகுதி மாணவர் அணி சார்பில் சகோதரி அனிதாவின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி மாத்தூர் 19 வது வட்டம் மூன்றாவது பிரதான சாலை அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகே நடைபெற்றது.

வட்டச் செயலாளர்கள் கா.தாமரைச்செல்வன், இ.கண்ணப்பன், கே.கருணாகரன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமை தாங்கி மலர் தூவி அஞ்சலி செலுத்தும் பணியை துவக்கி வைத்தார்.

தொடர்ந்து நீட் போராளி அனிதா புகழ் ஓங்குக. ஒன்றிய அரசை ஒன்றிய அரசே நீட் தேர்வு ரத்து செய் போன்ற கோஷங்களை கழகத்தினர் எழுப்பி தங்களது கண்டனத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணியில் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக செயலர்கள் என்று அனைவரும் அனிதாவின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள் பி.நிர்மல் குமார், நா.மோகன்குமார், நாகூரார், பா.சந்திரன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, கே ஏழுமலை, பா.கோபிநாத், எஸ். உதயகுமார், எஸ்.சிவக்குமார், கே.சண்முகப்பிரியன், அமுதா, மணிராஜ், டி. வினோத், அரியலூர் ராஜ்குமார், ஜி.சேகர், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம்.என்.அஜய் தென்னவன், விஜயன், சசிதரன், சௌந்தர், 16 வது வட்டம் முத்தையா, பரசுராமன், ராஜ்மோகன், சிவப்பிரகாஷ், மதி, மஞ்சுநாதன், 17 வது வட்டம் எஸ். பாலாஜி, சி.மூர்த்தி, ஜான்சன், வில்சன், பூபாலன், முனிவேல், மைக்கேல், செந்தில், 19 வது வட்டம் சரவணன், சையத் அப்சல், கதிரவன், ரா.குகன்,

நாகராஜன், குமார், சோமு, காசி, ஹரி, பிரசாத், மணிகண்டன், சேவை செல்வராஜ், செந்தில், சிவராமன், சாந்தா, ப்ரீயா தேவி, மீனாகுமாரி, விஜயா, 23 வது வட்டம் டி.எழில்குமார், மு.விக்னேஸ்வரன், கே.சிவக் குமார், சோ.சரவணன், டி. நெல்சன் ராஜ், 23 ஆட்டம் ராமச்சந்திரன் பி.சுதாகர், சாமிநாதன், முத்து கிருஷ்ணன், பார்பன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டார்.

நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை மாதவரம் வடக்கு பகுதி மாணவர் அணி அமைப்பாளர் த.விக்னேஸ்வரன், துணை அமைப்பாளர் என்.பிரபு ஆகியோர் செய்திருந்தார்கள்.



மாதவரம் வடக்கு பகுதி மாணவர் அணி சார்பில் நீட் தேர்வால் தன் இன்னுயிரை மாய்த்துக்கொண்ட சகோதரி அனிதாவின் நினைவேந்தல் நிகழ்ச்சி மாத்தூர் 19 வது வட்டம் மூன்றாவது பிரதான சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகே மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் நடைபெற்றது. வட்டச் செயலாளர்கள் கா.தாமரைச்செல்வன், இ. கண்ணப்பன், கே.கருணாகரன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன், பி.நிர்மல்குமார், நா.மோகன் குமார், நாகூரார் பா.சந்திரன், ஆர் .பாபு, த. விக்னேஸ்வரன், என். பிரபு, சசிதரன், சௌந்தர் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான கழகத் தோழர்கள் கலந்து கொண்டு அனிதாவின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட அரசு பள்ளிகளில்

# 78.55 லட்சம் மதிப்பீட்டில் புதிய மேஜை நாற்காலிகள்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ வழங்கினார்!

திருவள்ளூர், செப் 02;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி குட்பட்ட ஆவடி மாநகராட்சிகுட்பட்ட அரசு ஆரம்ப பள்ளி, தொடக்கப் பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் அடிப்படை வசிதிகள் செய்து தர பள்ளி தலைமை ஆசிரியர்கள் முன்னாள் அமைச்சர் சா.மு. நாசரிடம் கோரிக்கை விடுத்தனர்.. இந்த நிலையில் ஆவடி காமராஜ் நகர் நடுநிலைப்பள்ளி, பட்டாபிராம் சத்திரம் தொடக்கப்பள்ளி, கோவில் பதாகை தொடக்கப்பள்ளி, திருமுல்லைவாயல் அரசு ஆதிதிராவிட நலவாரிய ஆரம்ப பள்ளி, கோணாம் பேடு அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளிட்ட 14 பள்ளிகளில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 78.55 லட்சம் மதிப்பீட்டில் மேஜை நாற்காலிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வழங்கினார்.

இதனை தொடர்ந்து ஆவடி வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதிகளில் குடிநீர் வைப்பு நிதியின் கீழ் 40லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணியை பூஜையிட்டு துவக்கி வைத்தார். இதனிடையே அன்னனூர் மேம்பாலம் அருகே நெடுஞ்சாலை துறை சார்பில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால்வாய் பணிகளை பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் ஆவடி மாநகர ஆணையர் தர்ப்பகராஜ், மாநகர செயலாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர்கள் பேபி சேகர், ஜி.நாராயணபிரசாத், ஜி.ராஜேந்திரன், பொன்விஜயன், மண்டல குழு தலைவர்கள் அமுதா பேபிசேகர், ஜோதிலட்சுமி, வி.அம்மு, கவுன்சிலர்கள் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாநகரக் கழக அவைத் தலைவர்

# டாக்டர் ப.பொன்மணி மறைவு!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் - கழகத்தினர் அஞ்சலி!

நெல்லை.செப்.2-

நெல்லை மாநகர அவைத் தலைவர் டாக்டர். ப. பொன்மணி அவர்கள் (வயது 71 )உடல் நலக்குறைவு காரணமாக அவரது இல்லத்தில் நேற்று (செப்.1) அதிகாலை 1:30 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்து கழகத்தினர் திரளாக வந்து மலர் அஞ்சலி செலுத்தினர்.



கழகத்தின் நெல்லை நகர கழக செயலாளர்,நகர் மன்ற உறுப்பினர், நெல்லை சட்டமன்ற உறுப்பினர் மற்றும் கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருந்தும் விபத்தில் கால்களை இழந்த பின்பும் கழகத்தின் ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தின் அவை தலைவராக சிறப்பாக பணியாற்றி மறைந்த டாக்டர்.பத்மநாதன் அவர்களின் மகன் டாக்டர். ப.பொன்மணி அவர்கள் நெல்லை டவுண் சாமியார் சைக்கா தெரு முகவரியில் வசித்து வந்தார். கடந்த 12.7.2023 அன்று நெல்லை மாநகர அவை தலைவராக டாக்டர்.ப. பொன்மணி தேர்வு செய்யப்பட்டார். பொறுப்பேற்ற காலத்திலிருந்து கழக பணியை சிறப்பாக ஆற்றி வந்தார்.


இந்நிலையில் டாக்டர். ப.பொன்மணி (வயது 71) அவர்கள் அவரது இல்லத்தில் நேற்று உடல் நலக்குறைவு காரணமாக அதிகாலை 1.30 மணி அளவில் இயற்கை எய்தினார். அன்னாருக்கு துணைவியார் டாக்டர்.பாகிரதி, மகன்கள் டாக்டர் பொன்.பத்மநாபன் அவரது சகோதரர் வைரமணி மற்றும் சகோதரிகள் உள்ளனர்.

இயற்கை எய்திய மாநகர அவைத் தலைவர் டாக்டர்.ப.பொன்மணி அவர்களின் உடலுக்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான், அப்துல்வஹாப் எம்.எல்.ஏ மாநகராட்சி மேயர் சரவணன்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,பகுதி செயலாளர்கள் சுப்பிர மணியன், நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை, துபாய் சாகுல், மாநகர நிர்வாகிகள் அண்ணாதுரை, பாலமுருகன் என்ற பிரபு, சுதா மூர்த்தி, குமார், சங்கரலிங்கம், பெரியதுரை,

நெல்லை மண்டல தலைவர் மகேஸ்வரி, மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்புசாமி கோட்டையப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், தகவல் தொழில் பணி காசிமணி, உள்பட அனைத்து சார்பு அணி நிர்வாகிகள்,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி குடும்பத்தின ருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

அன்னாரது இறுதிச் சடங்கு நேற்று நெல்லையில் நடைபெற்றது.

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; நாக்பூர் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. வரலாறு பாடத் திட்டத்தில், தி.மு.க. மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - சி.பி.ஐ. குறித்த அத்தியாயங்களை நீக்கிவிட்டு, பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. குறித்த அத்தியாயங்களை புதிதாகச் சேர்த்திருக்கிறார்களாமே ?

**போண்டி :** **ஆமாய்யா; நாக்பூர் நகரம், பா.ஜ.க.வின் தாய் வீடு போன்றதும், மதவாதத்தையே மூலாதாரமாகக் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைமை இடமும் ஆகும் என்பதை அனைவரும் அறிவர்.**

**அப்படி இருக்கும்போது நாக்பூர் பல்கலைக் கழகமும் மதவாத உணர்வுடனும், பா.ஜ.க. மற்றும் அதன் அடிவருடும் அ.தி.மு.க. ஆதரவு எண்ணத்துடனும், வெளிப்படையாகவே செயல்படுவது ஒன்றும் வியப்பளிக்கவில்லை.**

**ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஜன சங்கம் குறித்த அத்தியாயங்கள் ஏற்கனவே அந்த பல்கலைக் கழகத்தின் பாடத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.**

**ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், கல்விக் கூடங்களும் எவ்வாறு காவிமயமாகின்றன என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு!**

**தி.மு.க. குறித்த அத்தியாயத்தை நீக்கி இருப்பது பற்றிக் கழகம் கிஞ்சிற்றும் கவலைப்படாது.**

**“காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ ?”.**

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வரும் செய்தி!




# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டாக்டர் பொ. பத்மநாபன்

### செப்டம்பர் 2 (1991)



திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

திருநெல்வேலி நகரச் செயலாளராக பத்து ஆண்டு காலமும் பின்னர், மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும், மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1955 முதல் 1976 வரை நெல்லை நகர்மன்ற உறுப்பினர், 1971இல் நெல்லை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நெல்லை நகர கூட்டுறவு வங்கித் தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1988ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் “அண்ணா விருது” பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.